FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313231

1. District : Chennai PS: Vigilance & Anti Corruption Year: FIR No.: 05 Date: 09/07/20
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு 2026 மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act 1988 (as amended) in Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 9.6.2026 to 8.7.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 09.7.2026 Time : 9.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : On 09.07.2026 at 9.30
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம் (Registered the FIR)

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 3.5 K.m
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : வோளச்சேரி பாலத்திற்கு கீழே அமைந்துள்ள
முறைக் காவல் எண் முகவரி போக்குவரத்து அலுவலகம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name: T. S. கதிர் வேல் (b) Father's/ Husband's Name : Tr. சாமியா
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth 50/2026 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Private Job (g) Address : எண். 1, வெங்கடாபுரம் தெரு, திண்டுக்கல் வங்கி காலனி, பள்ளிக்கரணை சென்னை- 600100
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
ராஜா, காவலர், வோளச்சேரி போக்குவரத்து பாலம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Enclosed Separate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

09/07/26
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 09/07/2026 at 11.50 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்

Name: பெயர் M. Priya
Rank: நிலை Inspector of Police No. எண்

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
Chennai City - I
Alandur, Chennai - 16.

(Contents of the F.I.R. in CC-1, V & AC, Cr.No. 05/2026/AC/CC-I, U/s. 7 of Prevention of Corruption (Amendment), Act –2018, continues.....)

பணிந்து அனுப்பப்பட்டது:- ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகர பிரிவு -I, காவல் ஆய்வாளர் M.பிரியா ஆகிய நான் இன்று 09.07.2026 -ம் தேதி மேற்சொன்ன அலுவலகத்தில் பணியில் இருந்த போது சென்னை -600 100, பள்ளிக்கரணை, சிண்டிகேட் பேங்க் காலனி, வெங்கட்ராமன் தெரு, எண் -1 என்ற முகவரியில் வசிக்கும் த/பெ.சாமிய்யா என்பவரின் மகன் திரு.S.கதிர்வேல் என்பவர் சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலகம் வந்து, சென்னை நகர பிரிவு -I -ன் காவல் ஆய்வாளர் ஆகிய என்னிடம் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமாக புகார் மனுவை கொடுத்தார். அவர் கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு அனுப்புநர்:S.கதிர்வேல், வயது 50, த/பெ.சாமிய்யா, எண்.1, வெங்கட்ராமன் தெரு, சிண்டிகேட் பேங்க் காலனி, பள்ளிக்கரணை, சென்னை-600100 செல்-9884662967, பெறுநர்:காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னைநகரப்பிரிவு -1, ஆலந்தூர், சென்னை-16, ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது சென்னையில் உள்ள ஒரு தனியார் ஹோட்டலில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.06.2026 ம் தேதி இரவு சுமார் 08.30 மணியளவில் இருசக்கர வாகனத்தில் எனது நண்பர் திரு.வினோத் அவர்களின் உடல்நிலை விசாரிப்பதற்காக வேளச்சேரி சென்னை சில்க்ஸ் துணிக்கடை உள்ள சாலை மார்க்கமாக பாலத்தின் அடிவாரம் வளைவுசாலை வழியாக மடிப்பாக்கம் செல்ல திரும்பிய போது வேளச்சேரி போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் திரு.ஆறுமுகம் மற்றும் அவரோடு சில காவலர்களும் என்னை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். மேலும் Drunk and Drive test கருவி கொண்டு என்னை சோதனை செய்து விட்டு நான் மது அருந்தியதாக கூறி Challan ஒன்றினை கொடுத்து காவல் உதவி ஆய்வாளர் திரு.ஆறுமுகம் எனது இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்தும் என்னை மறுநாள் ஒரிஜினல் RC மற்றும் Driving License எடுத்துக் கொணீடு வருமாறு கூறி அனுப்பி விட்டனர். அவர்கள் கூறியது போல் நான் மறுநாள் 09.06.2026 ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு வேளச்சேரி பாலத்தின் கீழே அமைந்துள்ள

போக்குவரத்து காவல் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு உதவி ஆய்வாளர் திரு.ஆறுமுகம் இருக்கையில் இல்லை எனவே அங்கு கணினியில் பணிபுரிந்துக் கொண்டிருந்த திரு.ராஜா என்கிற காவலரை சந்தித்து எனது இரு சக்கர வாகனத்தை கேட்ட போது, அவர் என்னுடைய வண்டியின் ஒரிஜினல் RC மற்றும் Driving License யை வைத்துக் கொண்டு ரூ.10,000/- அபராதம் செலுத்த வேண்டும் என்று சொல்லி வண்டியை என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டனர். வண்டியின் ஒரிஜினல் RC மற்றும் Driving License யை வாங்குவதற்காக காத்திருந்த போது திரு.ஆறுமுகம் உதவி ஆய்வாளர் அலுவலகத்திற்கு வந்தார். அவரிடம் சென்று பார்த்த போது அவர் கணினியில் பணிபுரிந்து கொண்டிருந்த திரு.ராஜா என்பவரை பார்த்து அவர் சொல்வது போல் செய்யுங்கள் என்று கூறினார். எனவே மீண்டும் திரு.ராஜாவை பார்த்து என்னுடைய வண்டியின் RC மற்றும் Driving License யை கேட்டதற்கு RC மற்றும் Driving License RTO அலுவலகத்திற்கு அனுப்பாமல் திருப்பி தரவேண்டும் என்றால் என்னை பார்த்து கவனியுங்கள் அதனால் ரூ.2,000/- பணம் தருமாறு கூறினார். தற்போது என்னிடம் பணம் இல்லை என்று கூறிய போது பணத்தை ரெடி செய்து கொண்டு வருமாறு கூறினார். நான் எனது RC மற்றும் Driving License வேண்டி போக்குவரத்து அலுவலகம் சென்று ராஜா அவர்களை பார்த்த போதெல்லாம் அபராதம் ரூ.10,000/- கட்டி விட்டீர்களா என்றும் எங்களுக்கு தரவேண்டிய பணத்தை ரெடி பண்ணிட்டீங்களா என்று கேட்டார். என்னால் பணத்தை தயார் செய்ய இயலவில்லை என்று கூறிவிட்டு திரும்பி வந்து விட்டேன். பிறகு நான் அபராத தொகையை தயார் செய்து கொண்டு 08.07.2026 ம் தேதி அலுவலகத்திற்கு சென்று திரு.ராஜா என்ற காவலரை பார்த்து அவரிடம் அபராத தொகை ரூ.10,000/- கொடுத்தேன். அதை அவர் கணினி மூலம் கட்டி ரசீது வழங்கினார். பின்னர் என்னுடைய RC மற்றும் Driving License யை கேட்ட போது RC புத்தகத்தை மட்டும் கொடுத்தார். என்னுடைய லைசன்ஸை கொடுங்கள் என கேட்டதற்கு குடித்துவிட்டு வாகனம் ஓட்டினால் லைசென்ஸை தற்காலிக தடை செய்ய RTO அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும், அவ்வாறு அனுப்பாமல் இருக்க ரூ.2,000/- தர வேண்டும் இல்லையென்றால் உன்னுடைய Driving license யை cancel செய்ய நடவடிக்கை

எடுத்துவிடுவோம் என்று கூறினார். நான் அவரிடம் அய்யா நான் இந்த ரூ.10,000/- ரூபாய் கடன் வாங்கி கொண்டு வந்துள்ளேன். என்னால் ரூ.2,000/- கொடுக்க முடியாது என கூறினேன். அப்போது ரூ.2,000/- த்தை குறைத்துக் கொண்டு ரூ.1,000/- பணம் கொடுக்குமாறு கூறினார். எனக்கு பணம் கொடுக்க விருப்பமில்லாததால் இன்று 09.07.2026 -ம் தேதி லஞ்ச ஒழிப்பு துறை ஆய்வாளர், சென்னை நகரபிரிவு -I அவர்களை சந்தித்து புகார் அளிக்கிறேன். என்னிடம் Driving License திரும்ப வழங்குவதற்கு லஞ்சமாக ரூ.1,000/- கேட்ட திரு.ராஜா மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு S.கதிர்வேல் (Sd.XXXX) 09.07.2026.

Sir,

The above complaint was received on 09.07.2026 at 9.00 hrs along with relevant records. After obtaining concurrence from the higher officials, conducting discreet verification and obtaining the necessary permission, a case was registered in V&AC, CC-I Cr.No.05/2026/AC/CC-I u/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 09.07.2026 at 09.30 hrs and was taken up for investigation. I hereby submit the original complaint, F.I.R before the Hon'ble Principal Sessions and City Civil Court Judge, Chennai. A copy of the F.I.R is also being forwarded to the concerned officers. (Sd XXXX) (M.PRIYA, INSPECTOR OF POLICE, V&AC, CC-I, CHENNAI-16)

M. பிரியா 09/07/26

INSPECTOR OF POLICE,
Vigilance and Anti-Corruption
Chennai City - 1
Alandur, Chennai - 16.